**அளவுக்கூறுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் நிதியம் - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அளவுக்கூறுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது

கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கடந்த ஆண்டுகளில் நிதியத்தின் இனங்காணப்படாத செலவினங்களாக அடையாளம் காணப்பட்டிருந்த ரூபா 47,301,127 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட ஆய்வுகூட உபகரணங்கள் தற்போது பயன்படுத்தப்பட்டுள்ள போதிலும் மீளாய்வாண்டின் போது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்படாமல், முன்னைய ஆண்டுகளின் செலவினங்களாக திரண்ட நிதியத்திற்கு இந்த உருப்படிகள் சீர்செய்யப்படடிருந்தன. | நாட்குறிப்பு பதிவின் மூலம் இதனை சீர்செய்து மூலதனமாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும், மேலும் 2019 இல் பெறப்பட்ட இந்த சொத்துகளுக்கான கொடுப்பனவுகள் வங்கி கணக்கிணக்கத்தின் போது இனங்காணப்படாத கொடுப்பனவுகளாக பதிவு செய்யப்பட்டு 2023 இல் அந்த கொடுப்பனவுகள் இனங்காணப்பட்டதென தெரிவிக்கப்பட்டுள்ளது. | முறையான கணக்கீடு உறுதிப்படுத் தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டு தொடர்பாக செலுத்தப்பட்ட ரூபா 1,919,484 கூட்டுமொத்தமான செலவினங்கள் ஆண்டுக்கான செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை, ஆனால் திரண்ட செலவினங்களுக்கான கொடுப்பனவாக கருதப்பட்டது. மேலும், தொடர்ந்துவரும் ஆண்டுக்காக செலுத்தப்பட்ட ரூபா 1,133,327 கூட்டுமொத்த தொகை மீளாய்வாண்டில் செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டது. | எதிர்காலத்தில் இதுபோன்ற பிழைகள் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும், மேலும் திருத்தங்கள் நாட்குறிப்பு பதிவு மூலம் மேற்கொள்ளப்படும். | முறையான கணக்கீடு உறுதிப்படுத் தப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட வங்கி கணக்கிணக்க கூற்றின் பிரகாரம் ரூபா 9,989,864 தொகையான இனங்காணப்படாத நேரடி பணவனுப்பல்களின் பெறுவனவு மற்றும் ரூபா 1,474,211 இனங்காணப்படாத கொடுப்பனவுகள் மீளாய்வாண்டு வரை காசுப் புத்தக மீதிக்கு சீர்செய்யப்பட்டிருந்த போதிலும் இந்த பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளுக்கான உரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளை சரிபார்க்க முடியவில்லை. | இனங்காணப்படாத பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளை இனங்காண்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | அவற்றைக் கண்டறிந்து சரியான முறையில் கணக்கீடு செய்வதற்கு உடனடி நடவடிக்கைக ள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலையான வைப்புச் சான்றிதழ்களின் பிரகாரமான மீதி ரூபா 893,496,632 தொகையான போதிலும் நிதி நிலைமை கூற்றில் நிலையான வைப்புக்கள் ரூபா 874,011,949 ஆக பதிவுசெய்யப்பட்டதால் அந்த மீதி ரூபா 19,484,683 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | நாட்குறிப்பு பதிவுகள் மூலம் திருத்தம் செய்யப்படும், மேலும் எதிர்காலத்தில் இதுபோன்ற பிழைகள் ஏற்படாமல் தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | முறையான கணக்கீடு உறுதிப்படுத் தப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானம் ரூபா 120,876,722 ஆக குறிப்பிடப்பட்ட போதிலும் கணக்காய்வு கணிப்பீடுகள் ரூபா 140,376,986 வட்டி வருமானத்தை காட்டியிருந்ததால் ரூபா 19,500,264 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும், நிதிக்கூற்றுக்கள் நிலையான வைப்பு மீது பெறவேண்டிய வட்டியாக ரூபா 24,618,273 ஐ காட்டிய போதிலும் கணக்காய்வு கணிப்பீடுகள் | தவறான நாட்களின் எண்ணிக்கையை பயன்படுத்தியதால் பிழை ஏற்பட்டது, எதிர்காலத்தில் இது சீர்செய்யப்படும். | முறையான கணக்கீடு உறுதிப்படுத் தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதனை ரூபா 27,539,122 ஆக காட்டியிருந்ததால் ரூபா 2,920,849 குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | | |
| (ஊ) | ரூபா 4,493,637 தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அட்டுறு செலவினங்களாக ஒதுக்கப்பட்ட போதிலும் அடுத்த ஆண்டுக்கான உறுதிச்சீட்டு சரிபார்ப்பின் போது ரூபா 7,052,334 கூட்டுமொத்தமான அட்டுறு செலவினங்கள் காட்டப்பட்டதால் ரூபா 2,558,697 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | நாட்குறிப்பு பதிவுகள் மூலம் இதனை சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | முறையான கணக்கீடு உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| (எ) | ரூபா 5,970,781 தொகையான செலுத்த வேண்டிய பெறுமதிசேர் வரி நிதிக்கூற்றுக்களில் திறைசேரிக்கு செலுத்த வேண்டிய வருமானத்தின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது. | கொடுப்பனவுகள் சரியாக மேற்கொள்ளப்பட்ட போதிலும், காசுப் புத்தகப் பதிவில் ஏற்பட்ட பிழை காரணமாக, இந்த இரண்டு தொகைகளும் தலைகீழாகப் பதிவு செய்யப்பட்டன. | முறையான கணக்கீடு உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1995 இன் 35 ஆம் இலக்க அளவுக்கூறுகள், நியமங்கள் மற்றும் சேவை சட்டத்தின் 20 (1) (அ) மற்றும் 37 ஆம் பிரிவுகள் | வியாபாரத்தில் பயன்படுத்தப்படும் அனைத்து அளவீட்டு கருவிகளும் வருடாந்தம் சரிபார்க்கப்பட வேண்டிய போதிலும் பயன்பாட்டில் உள்ள ஒவ்வொரு கருவியும் சரிபார்க்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு நிதியத்தில் முறையான நடைமுறை எதுவும் நிறுவப்பட்டிருக்கவில்லை. | அனைத்து அளவீட்டு கருவிகளுக்கும் பதிவு இலக்கங்களை வழங்குவதன் மூலம் முறையான தரவு முறைமையை நிறுவுவதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன, மேலும் இது தொடர்பான முன்னேற்றம் அடுத்த கணக்காய்வில் தெரிவிக்கப்படும். | சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணங்கள் நிதிப்பிரமாணம் 371 (2) (ஆ) திறைசேரியின் அங்கீகாரமின்றி, ஒரு உத்தியோகத்தரிற்கு ரூபா 100,000 எல்லையை விஞ்சி ரூபா 900,000 கூட்டுமொத்தம் எரிபொருள் முற்பணமாக 04 உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டில் வழங்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டில் ரூபா 100,000 எல்லையை விஞ்சாமல் இருப்பதை உறுதிப்படுத்தவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவு ஒவ்வொரு அரசாங்க வாகனத்தினதும் எரிபொருள் நுகர்வு சோதனை முந்தைய சோதனையிலிருந்து 12 மாதங்களுக்குப் பின்னர், 25,000 கிலோமீட்டர் தூரம் ஓடிய பின்னர் அல்லது ஒரு பெரிய இயந்திர பழுதுபார்த்தலுக்குப் பின்னர், இவற்றில் எது முதலில் வருகிறதோ அதன் பின்னர் நடாத்தப்பட வேண்டும். எனினும், திணைக்களத்திற்கு சொந்தமான 13 வாகனங்களுக்கு இவ்வாறான எரிபொருள் நுகர்வு சோதனைகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | எரிபொருள் நுகர்வு சோதனையை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 165,955,538 மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 75,092,226 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 90,863,312 தொகையான முன்னேற்றமொன்றை சுட்டிக்காட்டுகிறது. மொத்த வருமானம் ரூபா 137,377,208 ஆல் அதிகரித்தமை இம் முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 நவம்பர் 01 முதல் 2023 ஒக்தோபர் 31 வரை இரண்டு மின் உயர்த்திகளின் சேர்விஸ் (service) மற்றும் முறையான பராமரிப்புக்காக தனியார் நிறுவனம் ஒன்றுடன் ஒப்பந்தம் செய்யப்பட்ட போதிலும் | வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றாததன் விளைவாக தொழில்நுட்பக் குழு மாற்றப்பட்ட வேண்டியிருந்தது. | செலவினம் தொடர்பாக சேர்விஸ்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | உடன்படிக்கை திகதியிலிருந்து ரூபா 1,038,318 கொடுப்பனவின் போது 8 மாத காலதாமதத்தின விளைவாக ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு மின் உயர்த்திக்கும் 8 சுற்றுகளில் 16 சேர்விஸ் சுற்றுகள் தவிர்க்கப்பட்டன. | | எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் 79 வளிப்பதனாக்கி அலகுகளிற்கான சேர்விஸ் உட்படிக்கைகள் இல்லாததால், ஒரு வருட குறுகிய காலத்தில் பல பழுதுகள் மேற்கொள்ளப்பட்டன. 2023 ஆம் ஆண்டில் வளிப்பதனாக்கி அலகுகளிற்கான 36 இற்கு மேற்பட்ட சேர்விஸ் சுற்றுகளிற்காக ரூபா 2,137,590 பழுதுபார்ப்பு செலவு ஏற்பட்டிருந்தது. | அனைத்து வளிப்பதனாக்கி அலகுகளின் சேர்விஸை உறுதிப்படுத்தவதற்கும், செயலற்ற அலகுகளின் பழுதுபார்ப்புக்களை துரிதப்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | செலவினங்களை முறையாக முகாமை செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மஹிந்த ராஜபக்ஷ கல்லூரியின் தொழில்நுட்ப நடவடிக்கைகளுக்காக 2023 ஆம் ஆண்டில் HH-7294 இலக்கம் கொண்ட வாகனத்தை அகற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும் வாகனத்தின் பதிவை இரத்துச் செய்வதற்காக பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்படும். | பதிவை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயன்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் 04 காலாண்டுகளில் அடைந்துகொள்ளப்பட வேண்டிய பௌதீக இலக்கு சதவீதமொன்றாக சுட்டிக்காட்டப்பட்டது, ஆனால் அந்த வருடத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய அளவு எண்ணிக்கை பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. சில செயற்பாடுகளுக்கு, முன்னைய ஆண்டிலிருந்து அதே இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டிருந்தன, மேலும் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட பணிகளின் அளவை பொறுத்து முன்னேற்றம் மேற்கொள்ளப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | 2024 முதல், அளவிடக்கூடிய அனைத்து துறைகளும் அடையாளம் காணப்பட்டு, அளவு இலக்குகளை ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலக்குகளை சரியாக குறிப்பிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | உபகரண உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், | 600 என்ற வழக்கமான இலக்கைக் கருத்தில் | இலக்கை அடைந்துகொள்வத |

| | | | |
|---|---|---|---|
| | விற்பனையாளர்கள் மற்றும் பழுதுபார்ப்பவர்களை பதிவு செய்வதற்கான இலக்கு ரூபா 15 மில்லியன் வருமானத்துடன் 600 அலகுகளாக இருந்த அதேநேரம் உண்மையான அடைந்துகொள்ளல் முறையே 148 அலகுகள் மற்றும் ரூபா 0.69 மில்லியன் ஆகும். எனவே, இலக்கின் உண்மையான செயலாற்றல் ஏறத்தாழ 25 சதவீதம் மாத்திரமே ஆகும். | கொண்டு, 2023 இல் வழங்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டை விடக் குறைவாக இல்லை. 2024 ஆம் ஆண்டுக்கான சான்றிதழ்களை 2023 திசெம்பர் அளவில் வழங்க இயலாமையால் இந்த பற்றாக்குறை ஏற்பட்டது, ஆனால் இலக்கு அடைந்துகொள்ளப்பட்டது. | ற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 12 மாவட்டங்களில் அளவீட்டு நியமங்களைச் சரிபார்ப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் இந்தப் பணி 5 மாவட்டங்களில் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டது. | இணங்கப்பட்டது. | இலக்கை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | திறனுள்ள மற்றும் படித்த மக்களை உருவாக்குவதற்காக, அளவீட்டு அறிவைப் பரப்புதல் மற்றும் ஒன்றையொன்று சார்ந்துள்ள நிறுவனங்களுக்கு இடையே பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஊக்குவித்தல் ஆகியவற்றின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு, மீளாய்வாண்டில் நடாத்தப்படும் பொது விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் கண்காட்சிகளின் எண்ணிக்கைக்கான திட்டம் எதுவும் உருவாக்கப்படாததுடன் இதன் கீழ் இரண்டு கண்காட்சிகள் மாத்திரம் நடாத்தப்பட்டன. | இணங்கப்பட்டது. | இலக்குகள் சரியாக குறிப்பிடப்பட வேண்டும். |
| (உ) | நிறுவன கட்டமைப்பை வலுப்படுத்தும் நோக்கத்தின் கீழ், அளவுக்கூறுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் சட்டம் மற்றும் பிரமாணங்களை புதுப்பித்தலின் முன்னேற்றம் 35 சதவீதமாக உள்ளது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அடைந்துகொள்ளப்படாத இலக்குகளின் நிறுவன கட்டமைப்பை வலுப்படுத்தும் நோக்கத்தின் கீழ் அளவுக்கூறுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் சட்டத்தை புதுப்பித்தலின் முன்னேற்றம் முக்கியமாக 35 சதவீதமாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. | நிறுவன சட்டங்கள் மற்றும் விதிகளை புதுப்பிக்கப்பட்ட முறையில் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளின் கீழ், 9 அளவீட்டு விஞ்ஞான உத்தியோகத்தர்களுக்கு 8 ஆராய்ச்சி செயற்திட்டங்கள் | வெற்றிடங்களை நிரப்பி 6 மாதங்களுக்குள் இச்செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு முடிவு | அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை வினைத்திறனாக |

| | | |
|---|---|---|
| ஒதுக்கப்பட்டன. இந்த செயற்திட்டங்கள் மீளாய்வாண்டிற்குள் பூர்த்தி செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அவை குறித்துரைக்கப்பட்ட காரணங்களை வழங்காமல் 2024 ஆம் ஆண்டு வரை நீடிக்கப்பட்டன. | செய்யப்பட்டுள்ளது. | மேற்கொள்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் நிறுவனம் 26 வாகன சேர்விஸ் சந்தர்ப்பங்களுக்கு ரூபா 1,198,432 செலவினத்தை மேற்கொண்டிருந்தது. பெறுகை கையேட்டின் 3.4 ஆம் பிரிவின் பிரகாரம் சிறிய பெறுமதியுள்ள சேர்விஸ்கள் அல்லது வேலைகளின் பெறுகையின் போது பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து அல்லது தொலைபேசி விபரத்திரட்டின் மஞ்சள் பக்கங்களில் பட்டியலிடப்பட்டுள்ளவர்களிடமிருந்து குறைந்தபட்சம் 3 அல்லது 5 கேள்விகளின் அடிப்படையில் மதிப்பீடுகள் நடாத்தப்பட்டு தெரிவுசெய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து சேவைகள் பெறப்பட வேண்டிய போதிலும் இந்த நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை, அதற்கு பதிலாக, ஒரே சேவை வழங்குநரால் 17 சேர்விஸ் சந்தர்ப்பங்கள் ரூபா 827,570 கொடுப்பனவுடன் மேற்கொள்ளப்பட்டது. | இணங்கப்பட்டது. | பெறுகை வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய அளவீட்டு ஆய்வுகூடம் 66 ஆய்வுகூட அறைகளுடன் 2015 இல் நிறுவப்பட்ட போதிலும், தற்போது 12 அளவீட்டு துறைகளுக்காக 33 அறைகள் மாத்திரமே செயற்பாட்டில் உள்ளதுடன் மீதமுள்ள 33 அறைகள் (140,060 சதுர அடி பரப்பளவைக் கொண்டவை) கணக்காய்வு திகதி வரை விளைவற்றிருந்தன. | தற்போது, 20 ஆய்வுகூட அறைகள் வளிப்பதனாக்கி முறைமைகளுடன் இயங்குகின்றன, ஏனைய ஆராய்ச்சி அறைகளை வளிப்பதனாக்கி முறைமை மற்றும் காற்றோட்டம் இல்லாமல் பராமரிக்க முடியாது. | சொத்துக்களை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |